# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office பின்புறம்),
**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

## விசாரணை நாள் 10.07.2026

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் SA 16765-E-2024**

திரு எபி தாமஸ் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/ .. பொது அதிகார அமைப்பு
உதவி ஆணையர்,
நில நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (10.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு எபி தாமஸ் ஆஜராகவில்லை |
| தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7-ன்படி மனுதாரரின் வருகை கட்டாயமானதாகும். எனவே, அவரது வருகையின்மையை ஆணையம் பதிவு செய்கிறது | |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | சென்னை சேப்பாக்கம், நில நிர்வாகத் துறையின் உதவி ஆணையர் திரு கு.ச.ராம்குமார் ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1) மனு நாள் | 21.09.2024 |
| **கோரிய தகவல்**:- திருவான்மியூர் கிராமம், வேளச்சேரி தாலுகாவில் உள்ள சர்வே எண்.172/3 குறித்து 3 இனங்களில் தகவல் கோரியுள்ளார். | |

| | |
|---|---|
| துத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | இணைக்கப்பட்டுள்ளது |
| சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 08.11.2024 |
| சட்டப்பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாவது மேல்முறையீட்டு மனு நாள் | 23.12.2024 |

2) மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் சென்னை சேப்பாக்கம், நில நிர்வாக துறையின் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனு தொடர்பாக தான் கோரிய தகவல்கள் மறுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து, சட்டப் பிரிவு 19(1)-ன் கீழ் முதலாம் மேல்முறையீட்டு மனுவையும். பின்னர் சட்டப்பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளதை தொடர்ந்து, இன்று இந்த இரண்டாவது மேல்முறையீட்டு மனுவின் மீது விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

3) இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்கள் தொடர்பாக மனுதாரருக்கு 25.10.2024, 12.12.2024 மற்றும் 01.07.2026 ஆகிய தேதிகளில் பதில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்து, அவற்றின் நகல்களையும், அவற்றை மனுதாரர் பெற்றுக் கொண்டு வழங்கிய ஒப்புகை அட்டைகளின் நகல்களையும் ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

4) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவுகளை பிறப்பிக்கிறது:-

**மனுதாரர் 21.09.2024 நாளிட்டு அனுப்பியுள்ள 6(1) மனு தொடர்பாக மனுதாரருக்கு 25.10.2024, 12.12.2024 மற்றும் 01.07.2026 ஆகிய தேதிகளில் பதில் கடிதங்கள் அனுப்பப்பட்டு அவற்றின் நகல்களும், மனுதாரர் அவற்றை பெற்றுக் கொண்டு வழங்கிய ஒப்புகை அட்டைகளின் நகல்களும் ஆணையத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அடிப்படையில், மனுதாரருக்கு உரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஆணையம் கருதி, இந்த மேல்முறையீட்டு மனுவை முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.**

**ஒம்/- (அபய் குமார் சிங்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

<u>வழக்கு எண் SA 16765-E-2024</u>

<u>பெறுநர்</u>

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி ஆணையர்,
நில நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005

திரு எபி.தாமஸ், த/பெ எம்.டி.தாமஸ்,
எண்.480-சி, பஜார் பிரதான சாலை,
ராம்நகர், மடிப்பாக்கம்,
சென்னை - 600 091

Copy to file
CR/PA